# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2101/16 - 2018 දෙසැම්බර් මස 11 වැනි අඟහරුවාදා - 2018.12.11

*2101/16 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 11 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*அறிவித்தல் இலக்கம் 1*

***(175 ஆவது அத்தியாயமான) யாத்திரிகள் கட்டளைச் சட்டம்***

*சிவனொளி பாதமலை வாரம் - 2018/2019*

*மேற்குறிப்பிடப்பட்ட யாத்திரைக் கால வாரம் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 21 ஆந் திகதி முதல் 2019 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆந் திகதி வரை நடைபெறும் என்பதனை பொது மக்களுக்கு அறிவிக்கிறேன்.*

*யாத்திரிகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்கவிதிகள் யாத்திரைக் காலத்தில் செல்லுபடியாகும் என்பதை பொது மக்களுக்கு அறியத்தருகின்றேன்.*

*1948, ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிய 9859 ஆம் இலக்க வர்த்தமானி*

*1949, யூலை மாதம் 22 ஆந் திகதிய 10,000 ஆம் இலக்க வர்த்தமானி*

*1958, பெப்புருவரி மாதம் 07 ஆந் திகதிய 11,255 ஆம் இலக்க வர்த்தமானி*

*1961, யூலை மாதம் 07 ஆந் திகதிய 12,508 ஆம் இலக்க வர்த்தமானி*

*1962, மாச்சு மாதம் 02 ஆந் திகதிய 12,947 ஆம் இலக்க வர்த்தமானி*

*2017, செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதிய 2034/33 ஆம் இலக்க வர்த்தமானி*

*மாலனீ லொகு பொதாகம,*
*மாவட்ட செயலாளர்,*
*இரத்தினபுரி.*

*மாவட்டச் செயலாளர் அலுவலகம்,*
*இரத்தினபுரி,*
*2018, திசெம்பர் 10.*


1A - G 29072 — 17 (2018/12)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

### *சிவனொளி பாதமலை யாத்திரைக் காலம் - 2018/2019*

*1948 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிய 9859 ஆம் இலக்க வர்த்தமானி, 1949, யூலை மாதம் 22 ஆந் திகதிய 10,000 ஆம் இலக்க வர்த்தமானி, 1958, பெப்புருவரி மாதம் 07 ஆந் திகதிய 11,255 ஆம் இலக்க வர்த்தமானி, 1961, யூலை மாதம் 07 ஆந் திகதிய 12,508 ஆம் இலக்க வர்த்தமானி, 1962, மாச்சு மாதம் 02 ஆந் திகதிய 12,947 ஆம் இலக்க வர்த்தமானி, 2017, செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதிய 2034/33 ஆம் இலக்க வர்த்தமானி ஆகியவற்றின் ஊடாக வெளியிடப்பட்ட யாத்திரைக் காலம் தொடர்பான ஒழுங்குவிதியினை பொது மக்களின் அவதானத்திற்கு செலுத்துகின்றேன்.*

*1. ஓய்வறை/அம்பலம் என்பது-*

*1.1 லிஹிணிஹெல, பலாபத்தல விகாரை, ஹெரமிடிசபான, ஆண்டிஅம்பலதென்ன, வர்னாகல, சீதககுலை, மெதஹின்ன, இந்திகடபான என்ற ஓய்வறையாக அம்பலம் தங்குமிடங்களாக உபயோகித்தல் வேண்டும்.*

*1.2 தற்காலிக தங்குமிடங்கள் தயார் செய்தல் அல்லது நடாத்திச் செல்லக் கூடாது.*

*2. **கட்டிடங்கள் கட்டுதல்**.- நான் அல்லது உடந்தையான அலுவலரின் எழுத்துமூல அனுமதியின்றி யாரினாலும் அல்லது 2018, திசெம்பர் மாதம் 21 ஆந் திகதி முதல் 2019, மே மாதம் 19 ஆந் திகதி வரையிலான காலத்தினுள் நிரந்தர அல்லது தற்காலிக கட்டிடம், தங்குமிடங்கள், வியாபாரத் தலங்கள் நிறுவக் கூடாது.*

*3. **யாசகர்கள்**.- சிவனொளி பாத ஸ்தலத்தில் அல்லது அம்பலத்தில்/ஓய்வறைப் பகுதியில் எந்தவோர் இடத்திலும் யாசகர்கள் யாசகம் கேட்பது அல்லது பெறல், யாசகம் வழங்குதல் கூடாது.*

*4. **குளித்தல் மற்றும் கழுவுதல் :***

*4.1 தற்போது வனப் பாதுகாப்புத் திணைக்களம், மத்திய சுற்றாடல் அதிகார சபை மற்றும் மாகாண நிர்வாக ஸ்தாபனங்களூடாக கண்டுபிடிக்கப்பட்டு பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பாதுகாப்பான இடங்களன்றி ஏனைய இடங்களில் குளித்தல் அல்லது துணிகளைக் கழுவுதல் கூடாது.*

*4.2 தனியார் நிறுவனங்கள் ஊடாக குளித்தல் அல்லது துணி கழுவுவதற்கான இடவசதிகளை வழங்குவதற்குரிய ஏற்பாட்டினை மேற்கொள்ள நினைப்பின் அதற்காக வனப் பாதுகாப்புத் திணைக்களம், மாகாண சபை நிர்வாகத்தினால் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் சட்டபூர்வமான எழுத்துமூல அனுமதியினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.*

*5. **வாகனம்/பிரயாணப் பாதை :***

*5.1 பிரதேச சபை அல்லது உரிய மாகாண நிர்வாகத்தினால் ஒதுக்கப்பட்ட இடங்களைத் தவிர ஏனைய இடங்களில் வாகனங்கள் நிறுத்துவதற்கு உட்பிரவேசிக்கக் கூடாது.*

*5.2 யாத்திரைக் காலங்களில் ஒதுக்கப்பட்ட பாதைகளைத் தவிர வேறு பாதைகள் நிர்மாணித்தல் அல்லது உபயோகித்தல் கூடாது.*

*6. **சுற்றாடல் மற்றும் உட்கட்டமைப்பு :***

*6.1 யாத்திரையின் போது பாதையில் அல்லது சிவனொளி பாதமலை சுற்றுப்புறத்தில் அல்லது ஓய்வுசாலை அருகே சுற்றாடலை மாசுபடுத்தும் விதமாக பொலித்தீன், பிளாஸ்டிக் என்பவற்றை உரிய முறையில் அல்லாமல் அகற்றுதல் கூடாது.*

*6.2 சிவனொளி பாதமலை வனப் பிரதேசத்தினுள் தீ பிடிக்கும் வகையிலான தீச்சுவாலைகள் ஏற்படுத்தல் கூடாது.*

*6.3 யாத்திரைக் காலத்தில் பக்தர்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் மற்றும் குப்பைக் கூலங்களை அகற்றும் நடவடிக்கையினை மாகாண நிர்வாக சபைகளுக்கு மற்றும் மாவட்டச் சுகாதார சேவை அத்தியட்சகருக்கு வழங்குகிறேன்.*

7. **வைத்திய வசதிகள்**.- தனியார் நிறுவனங்கள் ஊடாக வைத்திய வசதிகள் வழங்குவதற்கு/முதலுதவி மத்தியஸ்தானங்களுக்காக மாவட்ட சுகாதார அத்தியட்சகரினால் மாகாண நிர்வாக சபைகளின் முன்னறிவித்தலுடனான எழுத்துமூல அனுமதியினைப் பெறல் வேண்டும்.

8. **வியாபாரம் மற்றும் நன்கொடைகள் :**

8.1 சிவனொளி பாதமலை ஓய்வறைப் பிரதேசங்களில் நடமாடும் வியாபாரம் செய்வது தடை.

8.2 நான் அல்லது என்னால் அனுமதியளிக்கப்பட்ட அலுவலரினால் அனுமதிக்கப்பட்ட இடங்களைத் தவிர ஏனைய இடங்களில் பூஜைப் பொருட்கள், பூஜைக்கான வட்டிகள், உணவுப் பண்டங்கள் அல்லது ஏனைய பொருட்களை விற்பனை செய்யக் கூடாது.

8.3 மதுபானம், புகைப்பொருள், போதைப் பொருட்கள் பிரயாணத்தின் போது எடுத்துச் செல்லல் அல்லது வியாபாரத் தலங்களில் வைத்தல், விற்பனை செய்தல், வாங்குதல் அல்லது உபயோகித்தல் கூடாது.

8.4 உட்பிரவேசிப்பு வீதி ஓரங்களில் அனுமதிக்கப்பட்ட இடங்களைத் தவிர்ந்த ஏனைய எந்த இடத்திலும் தற்காலிக அல்லது நிரந்தர வியாபாரத் தலங்கள் அமைத்தல் அல்லது நடாத்திச் செல்லல் அல்லது வியாபாரம் செய்யக் கூடாது.

8.5 வியாபாரத் தலங்களிலும், கட்டடங்களிலும் குப்பை கூழங்களை அகற்றுவதற்கான பாத்திரங்களை வைத்திருப்பதுடன் குப்பைகளை அதனுள் இட வேண்டும்.

8.6 வியாபாரத்திற்காக தயாரித்து வைக்கப்பட்டுள்ள உணவுப் பண்டங்களில் ஈக்கள் படியாதவாறு பாதுகாப்பான முறையில் மூடி வைக்க வேண்டும்.

8.7 நன்கொடைகளை (தன்சல்) வழங்கும் பக்தர்கள் அதை மேற்கொள்வதற்காக நான் அல்லது என்னால் அனுமதி வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரினால் ஏற்கனவே அனுமதியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

மாலனீ லொகு பொதாகம,
மாவட்ட செயலாளர்,
இரத்தினபுரி

மாவட்ட செயலாளர் அலுவலகம்,
இரத்தினபுரி,
2018, திசெம்பர் 10.

12-749